**டிசம்பர் – 01**

# TNPSC துளிகள்

- மகாராஷ்டிராவின் மருத்துவக் கல்வி அமைச்சகமானது டாக்டர் ஜகன்நாத் தீக்சித்தை உடல் பருமன் எதிர்ப்புப் பிரச்சாரத்தின் விளம்பரத் தூதுவராக நியமித்துள்ளது.
- சப்ரோடோ கோப்பை சர்வதேச கால்பந்து போட்டியின் (இளையோர் சிறுவர் பிரிவு) 59வது பதிப்பில் ஆப்கானிஸ்தானின் அமினி பள்ளியைத் தோற்கடித்து வங்காள தேசத்தின் க்ரிதா சிக்சா புரோதிஸ்தான் அணி வெற்றி பெற்றது.
- BFR ராக்கெட்டின் பெயரை ஸ்டார்ஷிப் என மாற்றுவதாக ஸ்பேஸ் X நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரியான எலன் மஸ்க் அறிவித்துள்ளார். BFR என்பது பெரிய ஃபால்கன் ராக்கெட் (Big Falcon Rocket) என்பதன் சுருக்கமாகும்.
- டெல்லி பல்கலைக்கழகம், அயர்லாந்தின் டப்ளின் கல்லூரி பல்கலைக்கழகம் மற்றும் இயற்கை வரலாற்று அருங்காட்சியகம் (UK) ஆகியவற்றின் உயிரியலாளர்கள் வடகிழக்கு இந்தியாவின் இமய மலைப் பிராந்தியத்தில் கொம்புகளையுடைய 4 தவளையினங்களைக் கண்டறிந்துள்ளனர்.
    - இந்த உயிரியியலாளர்களின் குழுவில் இந்தியாவின் தவளை மனிதர் என அறியப்படும் S.D. பிஜுவும் உள்ளடங்குவார்.
- தேசிய வானூர்தியியல் மற்றும் விண்வெளி நிர்வாகம் (NASA) ஆனது அதன் வரவிருக்கும் 2020 ரோவர் திட்டத்திற்கு இறங்கும் தளமாக ஜெஸெரோ பள்ளத்தைத் தேர்ந்தெடுத்துள்ளது.
    - இந்த ரோவர் திட்டமானது 2020 ஆம் ஆண்டு ஜூலை மாதம் விண்ணில் செலுத்தப்பட உள்ளது.
- ஆஸ்திரேலியா மற்றும் போலந்து ஆகிய நாடுகள் ஏற்கனவே நடைமுறையில் உள்ள தங்களது குடியேற்ற கொள்கைகளை வலுவற்றதாக மாற்றும் எனக் கருதி ஐ.நா.வின் புலம்பெயர்வு உடன்படிக்கையில் (UN pact on migration) கையெழுத்திட மறுத்துவிட்டன.
- அமெரிக்காவின் உலகளாவிய சமூக ஆஸ்காரிடமிருந்து இந்திய அரசியலின் வளர்ந்து வரும் நட்சத்திரம் என்ற விருதினை டாக்டர் தமிழிசை சவுந்தரராஜன் பெற்றுள்ளார். இவர் வளர்ந்து வரும் இந்திய அரசியல்வாதி என்ற பிரிவில் பரிந்துரைக்கப்பட்டார்.
- சேப்பாக்கத்தில் உள்ள கலைவாணர் அரங்கத்தில் 'தமிழ்நாடு காவல்துறையின் வீரத்தியாகிகள்' என்ற புத்தகத்தை தமிழக முதல்வர் வெளியிட்டார். இந்தப் புத்தகமானது பணியில் இருக்கும்போது உயிர் தியாகம் செய்த காவல்துறை அதிகாரிகளை கௌரவிக்கிறது.

# தமிழ்நாடு செய்திகள்

## உடலுறுப்பு தானத்தில் சிறந்த செயல்பாட்டிற்கான விருது

- வெற்றிகரமான உடலுறுப்பு தான திட்டத்தின் செயலாக்கத்திற்காக மத்திய சுகாதார

மற்றும் குடும்ப நல அமைச்சகத்தின் சிறந்த செயல்பாட்டிற்கான விருதினை தமிழ்நாடு சுகாதாரத் துறை பெற்றுள்ளது.

- இந்த விருதினை தமிழ்நாடானது 4-வது முறையாக பெற்றுள்ளது.

***பிற விருதுகள்***

- உடல் உறுப்பு தானம் குறித்த விழிப்புணர்வை மேம்படுத்துவதில் சிறந்த மாநிலம் - மகாராஷ்டிரா.
- உடனடி உறுப்பு மாற்று சிகிச்சை மேற்கொண்டவருக்கான விருது - Dr. சுப்பிரமணிய அய்யர், எய்ம்ஸ் கொச்சி.
- இந்தியாவில் முதலாவது கருப்பை மாற்று சிகிச்சை செய்ததற்கான விருது - Dr. ஷைலேஷ் புந்தம்பேகர், புனே.

## இந்தியா டுடே விருதுகள்

- 15-வது இந்தியா டுடே மாநிலங்களில் சிறந்த மாநில விருதுகள் 2018-ஐ இந்தியாவின் துணைக் குடியரசுத் தலைவர் புது டெல்லியில் வழங்கினார்.
- கீழ்க்காணும் பிரிவுகளில் சிறந்த செயலாக்கத்திற்கான விருதினை தமிழ்நாடு பெற்றது.
    - ஒட்டுமொத்த செயல்பாடு
    - சட்டம் ஒழுங்கைப் பராமரித்தல் மற்றும்
    - சுற்றுலாத் துறை
- தமிழ்நாடானது இந்தியாவின் இரண்டாவது மிகப்பெரிய மாநில பொருளாதாரமாக உருவாகியுள்ளது. இது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 8.4% பங்களிப்பை அளிக்கிறது.





- இந்தியா டுடேயின் மாநிலங்களில் சிறந்த மாநில கணக்கெடுப்பு 2018 ஆனது முன்னணி ஆராய்ச்சி நிறுவனமான MDRA (Marketing and Development Research Associates) என்ற நிறுவனத்தால் நடத்தப்பட்டது.

# சர்வதேசச் செய்திகள்

## மிசிசிபி செனட் தேர்தல்

- மிசிசிபியில் நடைபெற்ற U.S. செனட் தேர்தலில் குடியரசுக் கட்சியின் சிண்டி ஹைட்-ஸ்மித் தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட ஜனநாயகக் கட்சியின் வேட்பாளரான மைக் எஸ்பியைத் தோற்கடித்தார்.
- மிசிசிபியில் இருந்து செனட்டுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் பெண்மணி ஹைட் சுமித் ஆவார். வெர்மாண்ட் மாகாணம் மட்டுமே இதுவரை காங்கிரஸிற்கு பெண் உறுப்பினர்களைத் தேர்தெடுக்காத ஒரே மாகாணமாக உள்ளது.




- ஹைட் ஸ்மித்தின் இந்த வெற்றியைத் தொடர்ந்து அடுத்த ஆண்டில் 24 பெண்கள் செனட்டில் இடம் பெறுவர்.
- இது செனட்டில் பணிபுரியும் பெண்களுக்கான புதிய வரலாற்றை உருவாக்கும். இது தற்போது காங்கிரஸ் அவையில் உள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கையை விட ஒன்று அதிகமாகும்.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச்செய்திகள்

## உலகின் முதலாவது முழு உடல் ஸ்கேன் கருவி

- 20-30 வினாடிகளுக்குள் முழு மனித உடலையும் முதலாவது முறையிலேயே ஸ்கேன் செய்து முப்பரிமாணப் படத்தை பிடிக்கக்கூடிய உலகின் முதலாவது மருத்துவ படவியல் ஸ்கேனர் உருவாக்கப்பட்டுள்ளது.
- எக்ஸ்புளோரர் என அழைக்கப்படும் இக்கருவியானது,
    - அமெரிக்காவின் டேவிஸில் உள்ள கலிபோர்னியா பல்கலைக்கழகத்தின் அறிவியலாளர்கள் மற்றும்,
    - ஷாங்காய்-ஐ அடிப்படையாகக் கொண்ட யுனைடெட் இமேஜிங் ஹெல்த்கேர் (UIH) ஆகியோரின் கூட்டிணைவால் உருவாக்கப்பட்டது.
- இதில் தற்போதைய PET ஸ்கேனிங் முறையைவிட 40 மடங்கு குறைவான கதிரியக்க அளவில் ஸ்கேன் செய்ய முடியும்.



- இது பாசிட்ரான் உமிழ்வு தளக்கதிர் படவியல் மற்றும் X - கதிர் கணக்கீடு தளக்கதிர் படவியல் (CT) ஆகியவை இணைந்ததாகும். இந்த ஸ்கேனர் ஆனது முழு உடலையும் ஒரே நேரத்தில் படம் பிடிக்கக்கூடியது ஆகும்.

# பிரபலமானவர்கள், விருதுகள் மற்றும் நிகழ்வுகள்

## அமைதி, ஆயுதக் குறைப்பு மற்றும் மேம்பாட்டிற்கான இந்திராகாந்தி பரிசு - 2018

- சமீபத்தில் 2018-ம் ஆண்டிற்கான அமைதி, ஆயுதக் குறைப்பு மற்றும் மேம்பாட்டிற்கான இந்திரா காந்தி பரிசினை அறிவியல் மற்றும் சுற்றுச்சூழல் மையமானது (CSE) பெற்றுள்ளது.
- இது மறைந்த முன்னாள் பிரதமர் இந்திரா காந்தியின் பிறந்தநாளை முன்னிட்டு ஒவ்வொரு வருடமும் இந்திரா காந்தி அறக்கட்டளையால் வழங்கப்பட்டு வருகிறது.
- CSE (Centre for Science and Environment) ஆனது மறைந்த அனில் அகர்வாலின் தலைமையில் 1980-ல் நிறுவப்பட்டது.
- இது காற்று மாசுபாடு, உணவுப் பாதுகாப்பு, கழிவுநீர் மேலாண்மை மற்றும் காலநிலை மாற்றம் போன்ற பல்வேறு விவகாரங்களுக்காக பணியாற்றி வருகின்றது.

## தங்க மயில் விருது

- கோவாவின் பனாஜியில் நடைபெற்ற 49-வது சர்வதேச திரைப்பட விழாவில் டான்பாஸ் (Donbass) திரைப்படமானது புகழ்மிக்க தங்கமயில் விருதினைப் பெற்றது.
- கிழக்கு உக்ரைன் பிராந்தியத்தில் திறந்தவெளி ஆயுத மோதல் தொடர்புடைய கலப்பினப் போரின் கதையினை இந்த திரைப்படம் கூறுகின்றது.
- சிறந்த இயக்குநருக்கான வெள்ளி மயில் விருதினை மலையாளத் திரைப்படமான ஈ.மா.யாவு (Ee.Ma.Yau) பட இயக்குனரான லிஜோ ஜோஸ் பெல்லிஸெரி வென்றார்.

## உஸ்தாத் இம்ராத் கான் மறைவு

- உலகளாவிய அளவில் சித்தார் மற்றும் சர்பஹார் ஆகியவற்றைப் பரப்புவதற்காக தனது வாழ்நாளை அர்ப்பணித்த பிரபல இந்திய பாரம்பரிய இசைமேதையான உஸ்தாத் இம்ராத் கான் அமெரிக்காவில் காலமானார்.
- இவர் தாமதமான அங்கீகாரமானது தனது சாதனைகளைக் குறைத்துவிட்டது எனக்கூறி பத்மஸ்ரீ விருதினை கடந்த ஆண்டு நிராகரித்தார்.

# இதரச் செய்திகள்

## செனகல் நாட்டிற்கு இ-ரிக்சாக்கள் பரிசு

- இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் சுஷ்மா ஸ்வராஜ் செனகல் நாட்டின் தூதுவரிடம் 2 மின்-ரிக்சாக்களை புதுடெல்லியில் ஒப்படைத்தார்.
- இந்த நடவடிக்கையானது துய்மையான ஆற்றல் துறையில் இரு நாடுகளுக்கும் இடையேயான கூட்டுறவின் அடையாளமாக உள்ளது.
- செனகல் நாட்டின் அதிபரினுடைய கோரிக்கையின்படி இந்தியாவானது லித்தியம்-அயன் மின்கலன்களுடன் கூடிய 250 இ ரிக்சாக்களை மானிய அடிப்படையில் வழங்குகின்றது.
- செனகலுக்கு வழங்கப்பட்ட இந்த இ-ரிக்சாக்களானது கோயங்கா மின் மோட்டார் வாகனங்கள் பிரைவேட் லிமிடெட் என்ற நிறுவனத்தால் தயாரிக்கப்பட்டவையாகும்.

- - - - - - - - - - - - - - -